***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXIII Code of Criminal Procedure)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II COURT Mannargudi***
***CC.No. 137/2023– P.W. 1(LW.1)***

| | |
|---|---|
| *Name* | செந்தில்குமார் |
| *Father/Husband's Name* | நாகராஜன் |
| *Village* | ஆலத்தூர் |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | 41 |

**எதிரிகள் ஆஜர். இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 03.12.2024*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். மண் பரிசோதனை துறையில் வேலை செய்து வருகிறேன். எதிரிகளை எனக்கு தெரியும். பக்கத்துவீட்டுக்காரர்கள். கடந்த 10 வருடங்களாக எங்களுக்கும் பக்கத்துவீட்டுக்காரர்களான மாதவன் குடும்பத்தாருக்கும் இடப்பிரச்சனை இருந்து அடிக்கடி தகராறு ஏற்பட்டது. பிரச்சனையின் போது எல்லாம் அவர்கள் குச்சிகாரி தேவடியா மகனே என்று கெட்ட வார்த்தை சொல்லி எங்களை திட்டுவார்கள். நாங்களும் பொருமையாக சென்றுக்கொண்டிருந்தோம்.

2. 03.04.2023 தேதியன்று இரவு 07 இருந்து 07.45 மணியளவில் நானும், என் மனைவியும் வீட்டில் இருந்த போது வழக்கின் எதிரிகளான மாதவன், ரம்யா, இளஞ்செழியன் மற்றும் ரம்யாவின் அப்பா ஆகியோர் என் மனைவியை வெளியே வாடி குச்சிகாரி தேவடியா மகளே என்று கூறி திட்டினர். நாங்கள் சென்று வெளியே பார்த்த போது இவ்வழக்கின் எதிரிகள் நால்வரும் என் மனைவியை ஆடையை பிடித்து இழுத்துவிட்டு உள்ளாடையுடன் என் மனைவியை அடித்தனர். நான் சென்று கேட்டதற்கு நீ எதுவேணாலும் பண்ணிக்கொள் என்று எதிரிகள் அங்கியிருந்து ஓடிவிட்டனர். என் மனைவியை இவ்வாறு அவமானப்படுத்தியதாக

எனக்கு ஏற்பட்ட அவமானம் தாங்காமல் நான் அன்றைய தினம் இரவு காவல்நிலையம் சென்று எதிரிகள் நால்வரும் மீதும் புகார் மனு கொடுத்தேன். சம்பவம் தொடர்பாக போலிசார் என்னை விசாரித்தார்கள். இன்னமும் எதிரிகளால் எங்களுக்கு தொந்தரவாக உள்ளது.

3. நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார் மனு நான் எழுதிக் கொடுத்ததுதான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். (புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

இல்லை.

ஒம்/- எம்.சுரேஷ்கார்த்திக்,
நீதித்துறை நடுவர் எண்.2,
மன்னார்குடி.

***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXIII Code of Criminal Procedure)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II COURT Mannargudi***
***CC.No. 137/2023– P.W. 2(LW.2)***

| | |
|---|---|
| *Name* | கனிமொழி |
| *Father/Husband's Name* | செந்தில்குமார் |
| *Village* | ஆலத்தூர் |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | *27* |

**எதிரிகள் ஆஜர். இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 03.12.2024*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். அசா 1 என்னுடைய கணவர் ஆவார். எதிரிகளை எனக்கு தெரியும். பக்கத்துவீட்டுக்காரர்கள். கடந்த 10 வருடங்களாக எங்களுக்கும் எதிரிகளுக்கும் இடப்பிரச்சனை இருந்து வந்தது.

2. கடந்த 03.04.2023 தேதியன்று இரவு 07.30 மணியளவில் நான் எனது வீட்டில் நின்றுக்கொண்டிருந்தேன். எதிரிகள் மாதவன், ரம்யா, இளஞ்செழியன் மற்றும் ரம்யாவின் அப்பா ஆகியோர் எனது வீட்டிற்கு வந்து எனது வீட்டு வாசலில் வைத்து என்னை குச்சிகாரி தேவடியா மகளே என்று கெட்ட வார்த்தைகளால் பேசி, இந்த புருசனை விட்டு இன்னொரு புருசனை வைச்சிகபோறியா என்று கேவலமாக பேசி, என்னுடைய முடியை பிடித்து ரோட்டிற்கு இழுத்து வந்து என்னுடைய நைட்டியை பிடித்து இழுத்து கிழித்து எறிந்துவிட்டு என்னை நால்வரும் கையால் அடித்தனர். நால்வரும் என் நைட்டியை பிடித்து முற்றிலுமாக கிழித்துவிட்டனர். என் உள்ளாடையுடன் விட்டு அடித்தனர். எதிரிகளின் செய்கையால் எனது குழந்தைகளுக்கும், கணவருக்கும் பெரிய அவமானமாக இருந்தது. எனக்கு ஊருக்குள் அசிங்கமாகவம், அவமானமாகவும் இருந்தது. எனது கணவரையும்

நால்வரும் சேர்ந்து அடித்து விட்டனர். அன்றைய தினமே காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இல்லை.

ஒம்/- எம்.சுரேஷ்கார்த்திக்,
நீதித்துறை நடுவர் எண்.2,
மன்னார்குடி.